**OS NO:215/2010**
**Date:09.03.2020**
**Dw:1(cross continuation)**
**Name:Gogulrao**
**Address:**

2முதல் 4பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

குடும்ப ஏற்பாடுகளின் முன்னிலைக்கு வருவாய் துறை ஆவணங்கள் மாற்றப்பட்டுள்ளனவா என்றால் சில சொத்துக்கள் மாற்றப்பட்டுள்ளன. அவ்வாறு மாற்றப்பட்ட சொத்துக்களுக்குரிய பட்டா நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். குடும்ப ஏற்பாடு என்பது எத்திராஜுலுநாயுடுக்கும், பூலோகம்மாள் குடும்பத்திற்கும் ஏற்பட்டதா என்றால் அவர்களுக்குள் தனியாக ஏற்பட்டு இருக்கலாம், அதைப்பற்றி தெரியாது. எத்திராஜுலுநாயுடுக்கும், நாகேஷ்வரராவிற்கும் ஏற்பட்டது. பூலோகம்மாளுக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்ட தற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாவும், பதிவு செய்த உயிலும் தாக்கல் செய்துள்ளேன். கோவிந்தநாயுடுக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்ட தற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எஸ்எல்ஆர், எஸ்எப்ஒன் (village clasification register), தண்டல் பத்திரிக்கை (இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் வரி செலுத்தும் படி போட்ட பத்திரிக்கை)தாக்கல் செய்துள்ளேன். 1963ல் சிறு இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டாவா என்றால் இல்லை, 1948ன் இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் பிரிவு 26ன் கீழ் எஸ்எல்ஆர் வழங்கப்பட்டது. 1948சட்டத்தின் படி இழப்பீட்டு தொகை எங்கள் குடும்பத்தினரால் பெறப்பட்டதா என்றால் நான் பிறந்த தேதிக்கு முன்னால் இருப்பதால் இழப்பீட்டு தொகையை பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.64ல் உள்ள சொத்துக்கள் எங்கள் குடும்பத்தின் தாவா சொத்துக்களா என்றால் எங்கள் குடும்பத்தின் சொத்தும், என் தனிப்பட்ட சொத்தும் உள்ளது. பி.வா.சா.ஆ.64 யார் பெயரில் உள்ளது என்றால் கோவிந்தராஜ் பெயரில் உள்ளது. கோவிந்தராஜ் உயில் எதுவும் எழுதி வைத்தாரா என்றால் கோவிந்தராஜ் நாயுடு எழுதி வைக்கவில்லை, ஆனால் கோவிந்தராஜ் நாயுடுவின் மனைவி பூலோகம்மாள் உயில் எழுதி வைத்துள்ளார். மதனகோபாலின் சொத்துக்கள் அவரின் வாரிசுகளான 2முதல் 4பிரதிவாதிகளுக்கு பாகம் கிடைக்க வேண்டும் என்று சொன்னால் தவறு.

விடுதலைப் பத்திரத்தில் விவசாய நிலங்கள் காணப்படாததால் அதிலும் 2முதல் 4பிரதிவாதிகளுக்கு பாகம் கிடைக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை-இல்லை.